

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (18.8.2025) முகாம் அலுவலகத்தில், விஜிபி பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஜி. விஸ்வநாதன் அவர்கள் குடும்பத்தினருடன் சந்தித்து, தனது பேத்தியின் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (18.8.2025) முகாம் அலுவலகத்தில், முன்னாள் அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினருமான முனைவர் க. பொன்முடி தனது பிறந்தநாளையொட்டி மனைவியுடன் சந்தித்து வாழ்த்து பெற்றார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 59.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கீழ்க்கட்டளை ஏரியின் உபரிநீர் கால்வாய் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை நேற்று (18.8.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், துணை மேயர் மு. மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் (சென்னை மண்டலம்) சி. பொதுப்பணித் திலகம், மாமன்ற உறுப்பினர்கள் அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.8.2025) திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், மாணவிகளுக்கு 2025–2026 ஆம் கல்வியாண்டுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்வில், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், போக்குவரத்துத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.த.பிரபு சங்கர், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், மாநகராட்சி ஆளுங்கட்சி துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், இணை மேலாண் இயக்குனர் சி.கு.ராகவன், பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! சரிதா மகேஷ்குமார் எம்.சி. தலைமையில்

# கொளத்தூர் தொகுதி சார்பில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு நல உதவிகள்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – மேயர் ஆர்.பிரியா வழங்கினர்!

சென்னை, ஆக.19-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., கொளத்தூர் தொகுதி சார்பில், ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் கலைஞர் ஏழாம் ஆண்டு நினைவு நாள் போராளி ஓய்வதில்லை நினைவை போற்றி, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகளை -பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் - பெருநகர சென்னை மாநகராட்சி திருமதி . பிரியா ராஜன் ஆகியோர் வழங்கி சிறப்பித்தனர்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., கொளத்தூர் தொகுதி சார்பில் ஆகஸ்ட் 7 முத்தமி ழறிஞர் ஏழாம் ஆண்டு நினைவு நாள் போராளி ஓய்வதில்லை நினைவை போற்றி கலைஞர் - சுயமரியாதை ஒளிதந்த கலைஞர்! தொகை தந்து வழி தந்தார் தலைவர்!! எனும் தலைப்பில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகளை 18.8.25 திங்கட்கிழமை அன்று மாலை சென்னை, கார்த்திகேயன் சாலை, திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நலத்திட்ட விழாவில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் சரிதா மகேஷ்குமார் எம்.சி தலைமை வகிக்க, சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஐ.சி.எப். வ. முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ் குமார், தேவஜககர், புனிதவதி எத்திராசன் எம்.சி., எஸ். பன்னீர்செல்வம், வானவில் விஜய், எஸ்.தனசேகர், துரை கண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், சதாதீனதயாளன் எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, முன்னிலை வகித்தனர்.

எம்.தாவூத்பீ எம்.சி, யோக பிரியா தனசேகர் எம்.சி, பி.அமுதாபொன்னிவளவன் எம்.சி, சி. ஸ்ரீதணி எம்.சி ஆகியோர் வரவேற்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழாவில் - மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு - பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் - பெருநகர சென்னை மாநகராட்சி, திருமதி பிரியா ராஜன் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தனர்.

மேலும், இந்நலத்திட்ட விழாவில் தமிழன்பிரசன்னா, ரமணி லோகேஷ் எம்.சி., தமிழ்செல்வி சசிகுமார் எம்.சி., எம்.கமல் மு. சரவணன் எம்.சி., ராஜேஷ்ஜெயின் எம்.சி., வி.பரிமளம் எம்.சி., எம்.இ.சேகர் எம்.சி., உஷா நாகராஜ் எம்.சி., கே.பொற்கொடி எம்.சி., எம்.கமல் எம்.சி., எஸ்.உமா எம்.சி.,

கொளத்தூர் கிழக்கு மேற்கு பகுதி கழக நிர்வாகிகள்: பி.பழனி இளா.இளங்கோவன் எஸ்.கே.ரமேஷ் எல்.டி.தாமஸ் இரா.தயாளன் எம்.சாக்ரடீஸ் வி.வெங்கடேசன் ஆர்.காஞ்சனா பி.சூரி கொளத்தூர் கிழக்கு மேற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைதுரை பி.பொன்முடி கே.ஜார்ஜ் குமார் பி.டி.சி.ரவி ப.அன்பரசு டி.சந்திரசேகர் எம்.ஜெ.சி.பாபு பி.அதிபதி எம்.டி.தமிழ்செல்வன் செ.முருகன் என்.சௌந்தர்ராஜன் என்.பவுல்ராஜ் என்.ராமச்சந்திரன்

கொளத்தூர் கிழக்கு மேற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: எஸ்.டி.பாஸ்கர் பொன்னிவளவன் சி.சந்திரசேகர் க.விஜய ரங்கம் எஸ்.முரளி கே.சந்தானம் எம்.துளசி எஸ்.பி.சதீஷ்பாபு வெங்கடேசன் ஜி.செல்வம் பொன்புகழேந்தி புரசை. ஜி.ராமகிருஷ்ணன் ஆர். ஆரோக்கியதாஸ் எம்.நாகராஜ் அ. கன்னியப்பன் டி.ஏ. ராஜன் ஆர்.மோகனசுந்தரம் எஸ்.சம்பத்துமார் ஜெ.சரவணன் என்.ரவிசந்திரன் ஆர். சொக்கலிங்கம் எஸ்.நாகராஜன் ஏ.எம்.ராஜசேகர் ஆர். ஜெ.வெங்கடரமணமூர்த்தி

மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள்: கிழக்கு பகுதி ஆ.சு.அசோக்குமார் துரை வெங்கடேசன் கே.எஸ்.சபரிநாத் சொ.பழனி எஸ்.சின்னராஜா கொளத்தூர் சட்டர் க.ஜெயபால் பி.பாஸ்கர் எஸ்.துளசி குருபரன் எஸ்.மணிவண்ணன் எஸ். சுகுமார் எஸ்.தினேஷ் வி. ஜெ.கஜேந்திரன் கே.கங்காதரன் வெற்றிநகர்இ.சிவா எஸ். மதன் சி.வி.யோகராஜ் என். வேலன் எ.முகம்மது இஸ்மாயில் ஜி.லட்சுமணன் ஜி.எஸ். பிரகாஷ் டி.ரமேஷ் எஸ். டி.சீனிவாசன் பெ.குருநாதன் பிரவீன்சேட் மகாராஜன் சு.கி.ராஜ் கே.சதீஷ்பாலு அருண்மனோகர் பி. சுரேஷ் கௌரிகுருபரன் வி.பிரபாவதி எஸ்.விஜயலட்சுமி பெரியார் பிரியா டி.தமிழ்ச்செல்வி யமுனாதேவி த.ஹேமலதா பி. முனுசாமி உதயகுமார் ஜெகதீஷ் பிளம்பர் ஆறுமுகம் மல்லிபூநகர்சிவா பி. சுரேஷ்

கொளத்தூர் மேற்கு பகுதி பா.சரவணன் எஸ்.தினேஷ் எல்.ராமச்சந்திரன் அருண்மனோகரன் எ. பாபுராஜ் பி.டி. சி.ரமேஷ் ஜி.தன்ராஜ் எஸ். ரமேஷ்பாபு ஜெ.வினோத் ஆர்.தேவராஜ் ஜெ.ஆனந்த் டி.ரவிவேலன் எம்.லோகநாதன் ஜிம்.ஜி.ஸ்ரீதர் வி.வளர்மதி எஸ்.லட்சுமி ர.சாந்தி எஸ்.கிருபாகரன் டி.புவனசுந்தரம் எஸ்.சீனிவாசன் ஏ.ஜி. செந்தில்குமார் பி.அல்லி ராஜன் எஸ்.சுரேஷ் கங்கா ஆர்.சுரேஷ் ம.சுரேஷ்சந்த் க.யுவராஜ் ஜெ.குமரவேல் ம.வர்கீஸ் எம்.வீரேந்தர்நந்தா கே.யூனீஸ் என்.இளமகுரு ஜி.எஸ்.ஆனந்த் எஸ்பாபு எஸ் சக்திவேல் கொளத்தூர் தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் வி.தினேஷ்பாபு ப.அஷ்வின் ரா.கவிதா மற்றும் கழக மூத்த முன்னோடிகள், கழக நிர்வாகிகள் ஆகியோர் சிறப்பித்தனர்.

இப்பொதுக்கூட்டத்தில் கே.பி.ஆதவன்மணி நன்றி கூறினார்.

### மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் பங்கேற்பு!

# மதுரவாயல் 147 வது வார்டில் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாம்!

## வட்டச் செயலாளர் லயன் எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை, ஆக. 19

மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ஜி.மாதவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் ஆகியோரின் ஆலோசனையின்படி, சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வார்டு, மேட்டுக்குப்பம் (எஸ்.பி.பி) புஷ்பா கார்டனில் இன்று (19.08.2025 செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணி முதல் மாலை 5 மணி வரை "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

இதில் 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக் குழு உறுப்பினர் ரமணி மாதவன் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்.

எனவே நமது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் எஸ்.ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஒன்றிய அரசின் பெயரிலான திட்டங்களில் அதிக நிதிச் சுமை

# தமிழ்நாடு அரசின் தலையில் விழுகிறது! நிதிக் கூட்டாட்சியை நிலை நிறுத்துக!

## மக்களவையில் - கனிமொழி கருணாநிதி வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 19-

நாடாளுமன்ற மக்களவையில் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களை எழுப்பிடும் விதி எண் 377 இன் கீழ், திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி, ஒரு முக்கியமான விவகாரத்தை ஆகஸ்டு 18 ஆம் தேதி எழுப்பினார்.



"ஒன்றிய அரசின் நிதியுதவியுடனான திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாட்டின் மீது சுமத்தப்படும் அதிக நிதிச்சுமை குறித்து ஒன்றிய அரசின் கவனத்தை ஈர்க்க இந்த விவகாரத்தை எழுப்புகிறேன். பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (PMAY), பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) உள்ளிட்ட ஒன்றிய அரசின் குறைந்தபட்சம் 6 திட்டங்களுக்கு ஒன்றிய அரசை விட தமிழ்நாடு மாநில அரசு கணிசமான அதிக நிதிப் பங்களிப்பை வழங்குகிறது. இதை அதிகாரப்பூர்வ தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

PMAY இன் கீழ், ஒரு வீட்டிற்கு ரூ. 2,83,900 ஒதுக்கப் படுகிறது. இந்த செலவில் 61% நிதியை தமிழ்நாடு அரசே ஏற்கிறது. பிரதமர் பெயரிலான இத்திட்டத்துக்கு ஒன்றிய அரசு 39% செலவை மட்டுமே பங்களிக்கிறது.

இன்னும் கவலையளிக்கும் வகையில், PMMSY இன் கீழ், ஒன்றிய அரசின் பங்கு 27% தான். ஆனால் இத்திட்டத்தின் 73% செலவுகளை தமிழ்நாடு மாநில அரசு ஏற்கிறது.

இதுபோன்ற திட்டங்களில் ஒன்றியமாநில அரசுகளின் பங்களிப்பு என்பது 60;40 என்ற விகிதத்தில் இருக்க வேண்டும் என்ற அடிப்படை கொள்கையையே இது முற்றிலுமாக மாற்றிவிட்டது.

மேலும் இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதியத் திட்டத்தில் பயனாளிகளுக்கு தமிழ்நாடு அரசு ஆயிரம் ரூபாயும், ஒன்றிய அரசு 200 ரூபாயும் கொடுக்கின்றன. இத்திட்டத்தில் தமிழ்நாடு மாநில அரசின் பங்கு 83% ஆக உள்ளது.

ஜல் ஜீவன் திட்டத்துக்கு ஒன்றியமாநில அரசுகளின் நிதிப் பங்கு 50:50 என்ற விகிதத்தில்தான் இருக்க வேண்டும். ஆனால் தமிழ்நாடு மாநில அரசு ஜல் ஜீவன் திட்டத்துக்கு 55% பங்களிக்கிறது.

பிரதமரின் பெயரைக் கொண்ட இந்தத் திட்டங்கள் ஒன்றிய அரசின் திட்டங்களாக விளம்பரப் படுத்தப்பட்டாலும், அவற்றின் பாதிக்கும் மேற்பட்ட நிதியை தமிழ்நாடு அரசே அளிக்கிறது.

இது நிதிக் கூட்டாட்சிக்கு எதிரானது. கொள்கை ரீதியாக ஒப்புக் கொண்ட நிதி ஒதுக்கீட்டு நெறிகளை ஒன்றிய அரசு மீறுகிற வகையில் இருக்கிறது. எனவே ஒன்றிய அரசு நிதியளிக்கும் திட்டங்களுக்கான நிதி ஏற்பாடுகளை உடனடியாக மறுபரிசீலனை செய்யுமாறும், பரிந்துரைக்கப்பட்ட செலவுப் பகிர்வு அறிவுரைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்து, ஒன்றிய அரசின் நிதிப் பங்களிப்பை அதிகரிக்குமாறும் ஒன்றிய அரசாங்கத்தை வலியுறுத்துகிறேன்" என்று கனிமொழி கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

### தமிழ்நாட்டில் பாரம்பரிய –ஆன்மிக இடங்களில்

# சுற்றுலா வசதிகளை மேம்படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் – தருமபுரி ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, ஆக.19-

தமிழ்நாட்டில் பாரம்பரிய, ஆன்மீக இடங்கள், சுற்றுலா வசதிகளை மேம்படுத்த, பிரஷாத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி எழுப்பினார்.



புனித யாத்திரை மற்றும் ஆன்மீக, பாரம்பரிய மேம்பாட்டு இயக்கத்தின் (பிரஷாத்) திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய திட்டங்களின் நிலை என்ன? பாரம்பரிய, ஆன்மீக இடங்களை மேம்படுத்துதல் மற்றும் அதனை நிறைவு செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடு குறித்த விவரங்கள் என்ன?.

தமிழ்நாட்டில் சுற்றுலா வசதிகள்,அணுகல் சாலைகள், விளக்குகள், அடையாளங்கள், விளக்க மையங்கள் மற்றும் சுற்றுச்சூழல் நட்பு தீர்வுகள் போன்ற திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட குறிப்பிட்ட உள்கட்டமைப்பு கூறுகளின் விவரங்கள் என்ன?.

தமிழ்நாட்டில் தர்மபுரி மக்களவைத் தொகுதிக்காக ஏதேனும் திட்டங்கள் தற்போது பரிசீலனையில் உள்ளதா?

அவை பிரஷாத் திட்டத்தின் கீழ் ஒப்புதலுக்காக காத்திருக்கின்றனவா?அப்படி இருந்தால் கால தாமதங்களுக்கான காரணங்கள் என்ன? பிரஷாத் திட்டத் தின் வரம்பை விரிவுபடுத்த அரசு முன்மொழிகிறதா? என்று சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திரா சிங் ஷெகாவத் திடம் மக்களவையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (18.08.2025) சென்னை, சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூ.28.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வரவுள்ள மருத்துவ கட்டிடம் மற்றும் மருத்துவ உபகரணங்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கோண்டார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சித்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, தேசிய நலவாழ்வு குழும மாவட்ட வருவாய் அலுவலர் பழனிகுமார், பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் கார்த்திகேயன், இணை இயக்குநர் மரு.மலர்விழி மற்றும் மருத்துவர்கள், பொதுப்பணித்துறை அலுவலவர்கள் உடனிருந்தனர்.